

# தமிழ்மொழியும் இலக்கியமும்
## தரம் 6
## தவணை 1
## அலகு 2 எலியும் சேவலும்

**Mrs.Navamany Rajakumar**
**J/Kondavil Ramakirusna Mahavidyalayam**

# நவாலியூர் சோமசுந்தரப்புலவர்

- இந்த உரையாடலை எழுதியவர் நவாலியூர் சோமசுந்தரப்புலவர் ஆவார்.
- இது நாடகமாக நடிக்கக்கூடிய வகையில் பாட்டும் கதையுமாக அமைந்துள்ளது.
- இதனைக் கதைப்பாடல் என்றும் கூறலாம்.
- யாழ்பாணத்து நவாலியில் 1878 ஆம் ஆண்டு பிறந்தவர் சோமசுந்தரப்புலவர்.
- “தங்கத்தாத்தா” என்று சிறப்பிக்கப்படுபவர்.
- தமிழ் இலக்கண, இலக்கியப் புலமையோடு வடமொழிப் புலமையும் கொண்டிருந்தார்.





- குருகுலக்கல்வி மூலமாக பழந்தமிழ் நூல்களைக் கற்றவர்.
- சிறுவர்களுக்காக இவர் எழுதிய பாடல்கள் பெரியவர்களாலும் விரும்பிப் படிக்கக்கூடியவை.
- தர்மசிந்தனைகளையும், சிறார்களுக்குரிய ஒழுக்க நெறிமுறைகளையும் எடுத்துக்காட்டி விழிப்பூட்டுவனவாக இவருடைய பாடல்கள் அமைந்துள்ளன.
- “இலங்கை வளம்” என்ற நூலை எழுதித் தந்துள்ளார்.
- “சிறுவர் செந்தமிழ்” என்ற நூலில் பள்ளிப்பிள்ளைகளுக்கு சமூகவிழிப்புணர்வை ஏற்படுத்தும் பாடல்கள் பலவற்றைப் பாடியுள்ளார்.
- “ஆடிப்பிறப்பிற்கு நாளை விடுதலை, கத்தரித்தோட்டத்து வெருளி” என்ற பாடல்கள் இன்றும் எல்லோராலும் பாடப்பட்டும் பேசப்பட்டும் வருவன.
- ஈழத்து இலக்கிய வரலாற்றில் இவருக்கு தனித்துவமானதோர் இடம் உண்டு.

# இனி நாம் பாடத்திற்குள் செல்வோம்

- பாத்திரங்கள்: தாய் எலி, சேய் எலி, பூனை, சேவல்
- முதலாம் காட்சி

சேய் எலி : வெய்யிற் கொடுமை அம்மா மேனி வேர்க்குதம்மா!
பைய உலாவிவரப் பரிந்துவிடை தாரும் அம்மா!
பொல்லாத வெப்பம் அம்மா! புழுங்கி அவியுதம்மா!
மெல்ல உலாவிவர விரும்பி விடை ஈயும் அம்மா!




தாய் எலி : ஆசை மிகுந்த என் மைந்தா! அன்பான கண்மணியே!
மோசம் வரும் மகனே முற்றத்திலும் போகவேண்டாம்.
பொல்லாத துட்டர் மைந்தா! புறத்தே பதுங்கி நிற்பர்!
அல்லாதன புரிவர் ஐயா நீ போகவேண்டாம்.

- **சேய் எலி:**



ஆண்பிள்ளை நான் அலனோ அன்னாய் பயம் உனக்கேன்
வீண்பிள்ளை ஆக்காதே விடை அருளிச் செய்யும் அம்மா!
கும்பிட்டேன் அன்னை உன்னை குறுக்கே நீ மறிக்காதே!
வெம்பிப் புழுங்கும் இங்கு வெளியே போய் வருவேன் அம்மா!



**தாய் எலி:**

மகனே! "பெற்ற மனம் பித்து பிள்ளை மனம் கல்லு"
என்பது போலப் பிடிவாதமாக நிற்கிறாய். சரி நீ நினைத்தபடி,
போய் வருவாய் என்மகனே!
புத்தியுடன் பத்திரமாய்
நீ திரும்பும் அவ்வளவும்
நின்று வழி பார்த்திடுவேன் - போய்வருவாய்

# இரண்டாம் காட்சி

**சேய் எலி:**

தொங்கிச் சுவரில் குதிப்பேன் - மிகத்
துரிதமாக ஓடித் துள்ளி மிதிப்பேன்
அங்கும் இங்குமாக நடிப்பேன் - சுவைத்
தருந்தும் உணவை மணந்து பிடிப்பேன்





ஆனந்தமான வெளிச்சம் - மகிழ்
வாக வுலாவுதற் கணுகுமோ அச்சம்
தேனுந்து மாமலர் வாசம் - வரும்
சில்லென்று தென்றலும் மிகுந்த உல்லாசம்





அடுக்களைப் புறத்திலே ஓடி – அங்கே
அப்பமும் வெண்ணெயும் அருந்துவேன் தேடி
எடுத்துக் கடித்துண்டு கொண்டு – மிக
இன்புறுவேன் ஓடி அன்னையைக் கண்டு

## செயற்பாடு ஒன்று

### பொருத்தமான எழுத்துக்களை இட்டு சொற்களைப் பூர்த்தி செய்க.

1. உரை.....டல் (ய, யா)
2. நவா.....யூர் (லி, லீ)
3. இலங்கைவ.....ம் (ல, ள)
4. வெ.....யில் (ய், ய)
5. கொ.....மை (ட, டு)
6. மே..... (னி, ணி)
7. உ......வி (ளா, லா)
8. பு.....ங்கி (லு, ழு)
9. அல்......தன (லா, ழா)
10. வெ.....ச்சம் (லி, ளி)





## செயற்பாடு இரண்டு

## 2. தொடர்புபடுத்துக.

| | |
|---|---|
| 1) சோமசுந்தரப்புலவர் பிறப்பு | உலாவிவருதல் |
| 2) இலங்கைவளம் | பிள்ளைமனம் கல்லு |
| 3) வெய்யில் கொடுமை | நவாலி 1878 |
| 4) வெளியே | தங்கத்தாத்தா |
| 5) பெற்றமனம் பித்து | மேனிவியர்த்தல் |

## செயற்பாடு மூன்று

3. தரப்பட்ட சொற்களுக்குப் பொருத்தமான ஒத்த சொற்களைத் தெரிவு செய்து எழுதுக.



| |
|---|
| ஒளி, உடம்பு, அம்மா, பகைவர், அச்சம், பதில், தடுக்காதே, சூடு, மகிழ்ச்சி, அறிவு |

1. மேனி -
2. அன்னை -
3. துட்டர் -
4. வெளிச்சம் -
5. விடை-
6. பயம் -
7. மறிக்காதே -
8. வெப்பம் -
9. மதி -
10. ஆனந்தம் -

## செயற்பாடு நான்கு

4. பின்வரும் வினாக்களுக்குப் பொருத்தமான விடைகளைப் பெட்டியினுளிருந்து தேர்ந்தெடுத்து எழுதுக.

| |
|---|
| 1.வெளியே ஆபத்து நிறைந்துள்ளது, பகைவர்கள் காத்திருப்பர். 2. சேய்எலி 3. பயனற்றபிள்ளை<br>4. துட்டர்கள் 5. பிடிவாதம் 6. தாய்எலி 7. புத்தியுடன் பத்திரமாய் 8. பெற்றமனம் பித்து பிள்ளைமனம் கல்லு<br>9. எதிர்பார்த்துக் காத்திருத்தல் 10. வெய்யிற் கொடுமையால் மேனி வியத்தமையால் |

1. “வெய்யிற் கொடுமையம்மா மேனி வேர்க்குதம்மா” என்று பாடியது எது?
2. “மோசம் வரும் மகனே முற்றத்திலும் போகவேண்டாம்” என்று தடுத்தது யார்?
3. தாய் எலி சேய் எலிக்குக் கூறிய அறிவுரை யாது?
4. சேய் எலி ஏன் வெளியே செல்ல விரும்பியது?
5. அல்லாதன புரிபவர்களை தாய் எலி எவ்வாறு எடுத்துக்காட்டியது?
6. தாய் எலியால் முன்வைக்கப்பட்ட பழமொழி யாது?
7. இப்பழமொழி உணர்த்தும் கருத்து என்ன?
8. சேய் எலி எவ்வாறு திரும்பிவர வேண்டும் என்று தாய் எலி விரும்பியது?
9. “வீண்பிள்ளை ஆக்காதே” என்பதில் **“வீண்பிள்ளை”** என்பது குறிப்பது யாது?
10. “நீ திரும்பும் அவ்வளவும் நின்று வழிபார்த்திடுவேன்” என்பதால் உணர்த்தப்படுவது யாது?

# மூன்றாம் காட்சி

- பூனை:

மாஅயோ – மாஅஅயோ- மாஅஅயோ- மாஅஅயோ...
முள்எலும்பு நோக முதுகு மிக வலிக்க
உள்ளம் நடுநடுங்க ஓங்கி அடித்தாளே
மாஅஅயோ.....



மெத்த வலிப்பெடுக்க மேனி நடுநடுங்க
மத்தால் அடித்தாளே! முனம் இரங்கா மாபாவி – மாஅஅயோ
மெய் ஒடிய மத்தால் வெடுக்கென்று அடித்தவள் தன்
கை ஒடிந்து மெத்தக் கலங்காளோ மாபாவி
மாஅஅயோ........

- சேவல்:



பூனையாரே பூனையாரே! புத்திமிக்கக் கலங்கிப்
பாதி விழி மூடிப் பாடுகிறீர் காரணமென்ன?
காலை நக்கி நக்கி இரு கண்ணும் முகமும் துடைத்து
வாலைக் குழைத்து அனுங்க வந்த வருத்தம் என்ன?



பூனை: சட்டியில் காய்ச்சிய பாலைத் தோய்த்துச்
சமையற்காரி வைத்தாள் உறியதன் மேலே
எட்டிப் பரண்மேலே தாவிக் - குதித்து
ஏறினேன் உறியினில் இனிதாக மேவி



பார்க்கப் பார்க்கப் பசி மீறும் - பசும்
பாலின் மணத்தினால் வாய் மிக ஊறும்
ஆர்க்கும் காணாமல் அங்கிருந்தே – வெகு
ஆனந்தமாய் உண்டேன் அமுது ஒத்த விருந்தே



காண்பார்கள் என்று நினைத்தே - இரு
கண்களை மூடி என் நாவை நனைத்தே
மாண்பாக யான் உண்ணும் போது – அங்கே
வந்தாளே அந்த மடைக்குல மாது

சத்தப் படாமலே வந்து – மேலே
தங்கி அருந்துங் களவினைக் கண்டு
மத்தால் அடித்தாளே பாவி – உடல்
வலிக்குதே ஐயையோ! மறுகுதே ஆவி



**சேவல்:** ஐயா! களவு பொல்லாதது - இதை
அறியாது செய்ததால் வந்ததே தீது
மெய்யாய் அடாது செய்தோரே – மிக
வெம்பிப் படாது படுவார்கள் நேரே

**பூனை:**

பொல்லாது சூதொடு வாதும் - என்று
புத்திசொல்ல வந்தீர் போம் இனிப் போதும்
நல்லாய்ப் பசிக்குது காணும் - இனி
நான் அங்கு போய் இரை தேடுதல் வேணும்



## செயற்பாடு ஒன்று

### 1. சரியான விடையைத் தெரிவு செய்க.



1. உள்ளம் என்பதன் ஒத்த சொல்

(1) உள்ளே (2) மனம் (3) உள் (4) மண்

2. “மெய்யொடிய மத்தால்” இதில் மெய் என்பது குறிப்பது

(1) உண்மை (2) வாய் (3) உடம்பு (4) சத்தியம்

3. “புத்தி மிகக் கலங்கி பாதி விழி மூடி” இதில் “விழி” என்பது

(1) கண் (2) மடல் (3) வழி (4) பழி

4. “வாலைக் குழைத்தல்” என்பதன் பொருள்

(1) வால்பிடித்தல் (2) வாலைவளைத்து ஆட்டல் (3) வால் (4) ஆட்டல்

5. பார்க்கப் பார்க்க என்பது

(1) அடுக்கிடுக்கு (2) இரட்டைக்கிளவி (3) அடுக்குத்தொடர் (4) இணைமொழி

## செயற்பாடு இரண்டு

2. சரியாயின் சரி எனவும் பிழையாயின் பிழை எனவும் எழுதுக.

1. சட்டியில் காய்ச்சிய பாலை சமையல்காரி உறியின்மேல் வைத்தாள்(....)
2. பூனை யாரும் காணாமல் பாலைக் குடித்தது (......)
3. களவெடுப்பது பொல்லாத காரியம் எனச் சேவல் கூறியது (.......)
4. பூனை சேவல் கூறிய புத்திமதியைக் கேட்டு நடந்துகொண்டது (......)
5. அடாது செய்தோர் படாது படுவர் என்பது பழமொழியாகும் (......)
6. சமையற்காரி பூனைக்குத் தடியால் அடித்தாள் (.......)
7. பூனை கண்களைத் திறந்தபடியே பால் குடித்தது (.......)
8. மாது என்பது வீட்டுக்காரப் பெண்ணைக் குறிக்கிறது (.......)



## செயற்பாடு மூன்று

3. பின்வரும் வினாக்களுக்கு சுருக்கமான விடையைத் தேர்ந்து எழுதுக.



1. பூனைக்கு அறிவுரை கூறியது எது?
2. பாதி விழி மூடிப் பாடியது எது?
3. சமையற்காரி காய்ச்சிய பாலை எங்கே வைத்தாள்?
4. பூனையின் வாயை ஊறச் செய்தது எது?
5. மாது என்பதன் பொருள் என்ன?
6. சேவல் மூலம் முன்வைக்கப்பட்ட அறிவுரை யாது?
7. பூனை உடம்பின் எப்பகுதிகள் வலிப்பதாக அழுதது?
8. பூனை எவ்வாறு வீட்டுக்காரியைத் திட்டியது?

1. பாலின்சுவை
2. உறி
3. சேவல்
4. பொய்சொல்லக்கூடாது
5. முள்ளெலும்பு,முதுகு
6. பெண்
7. மாபாவி
8. பூனை



# நான்காம் காட்சி

- **பூனை:**

ஓகோ! ஓர் எலி வருகிறது. அதை மெல்லப் பதுங்கியிருந்து பிடித்து உண்ண வேண்டும்.



எலியே நீ வருவாய் - எனக்கு
இரையாகவே வருவாய்
நலியாது என் பசி நான் உனைத் தின்னுவேன்
எலியே நீ வருவாய்



(பூனை எலியைப் பிடிக்கப் பாயப்போகும் நேரத்தில் சேவல் கூவுகின்றது)

**சேவல்:**

கொக்கறொக் கோஒ கொக்க றொக்கோ கூஉ
மிக்கவெய்யில் இக்கணமே போஒஒ
விண்ணும் மண்ணும் மூடியிருள் வாஅஅஅ
கொக்கறொக்கோஒ கொக்கொறொக்கோஒ



- (எலி பயந்து தாயைக் கூப்பிட்டுக்கொண்டு ஓடுகிறது)

சேய் எலி:

ஓடிவருவாய் அம்மா! உள்ளம் கலங்குதம்மா!
வாடி நடுங்குகின்றேன் வந்துபயம் தீருமம்மா!
மேவி ஒருவனம்மா விண்ணதிரச் சத்தமிட்டான்
ஆவி அகத்தோ புறத்தோ அன்னையே ஓடிவாரும்!



- (தாய்எலிவந்து சேய் எலியைத் தழுவிக்கொண்டு வினாவுதல்)

தாய்எலி:



அன்பு மிகுந்த என் செல்வா – என்ன
ஆபத்து நேர்ந்தது அறிந்திடச் சொல்வாய்
என்பு முறிந்திட ஓடி - இங்கே
இரங்கியே வந்தனை ஏங்கியே வாடி

- சேய் எலி:

கொண்டையில் இரத்தம் தோய்ந்த
கூரிய வாள் ஒன்று உண்டு
கண்டத்தில் இரண்டு கத்தி
கட்டியே தூங்கும் அம்மா
சண்டைசெய் வீரன் போலச்
சடசட என்று அடித்து
விண்டது பெரிய சத்தம்
மெய்ம்மறந்து அறிவு சோர்ந்தேன்







விடுவிடு என்று கைதட்டி – அம்மா
வினாவிசைக் குறிபோல் கழுத்தை வளைத்து
கொடுமை செய் கூற்றுவன் போல – வந்து
கூவினதே ஒரு பொல்லாப் பிராணி



அல்லாது போனால் என் அம்மா
அருமையானவோர் தோழனைக் கண்டு
நல்ல சல்லாபம் செய்வேனே - அதை
நாசப் படுத்திய தேஅப் பிராணி

(என்ன ஒரு அருமையான பிராணி. பஞ்சுபோல மெதுமையான மயிர், பளிங்குபோல இரண்டு கண்கள், சத்தப்படாமல் என்னை இருந்து பார்த்துச் சிரித்து என்னோடு ஏதோ பேச எழுப்பியது. அடடா! அந்த நேரத்தில் செவ்வரத்தம் பூப்போலத் தலையை உடைய உந்தப் பொல்லாத பிராணி சத்தஞ்செய்து வெருட்டிவிட்டதம்மா!)

- **தாய் எலி:**

கண்மணி போன்ற மகனே – நீ
கண்டு பயந்த தனை நன்றுரை செய்யின்
வண்ணமுடைய சேவல் - ஒரு
வஞ்சகமும் இல்லாத நல்ல செஞ்சொற் சேவல்





மற்றப்பிராணி மகனே! எம்மை
மறைவில் இருந்து பிடித்து உண்டு மகிழும்
குற்றமுடைய பூனை – அதன்
கோலத்தினால் மயங்கல் சாலத் தவறே.



- (தாய் எலி சேய் எலிக்குப் புத்தி புகட்டுகிறது)

**தாய் எலி:**



கண்மணி அனைய என்னரு மகனே!
உன்னிடம்மகிழ்வாக உரைப்பது கேட்பாய்
வெளிப்புற வேடப் பொலிவினை நோக்கி
உள் அகத்து எண்ணம் உரைத்திடப் போமோ?



பொல்லா மறவன் புதரில் மறைந்து
மெல்லெனப் பறவையை வீட்டுதல் போல
நல்ல வேடம் தனிலே மறைந்து
அல்லன செய்யும் மாந்தரும் உளரே

கடுஞ்சொற் கூறி இனிமை பயக்கும்
நடுநிலை நண்பரும் பலருண்டு அதனால்
அகமும் புறமும் ஆராய்ந்து
தகுதி நண்பரைத் தான் கொளல் முறையே



# செயற்பாடு ஒன்று

1. பின்வரும் தொடர்களை ஒழுங்குபடுத்தி வாக்கியம் ஆக்குக.



1) எலியை / பதுங்கியிருந்தது / பூனை / பிடிக்கப்

.........................................................

2) கூவியது / கொக்கொறொக்கோ / சேவல் / என்று

..........................................................

3) ஓடியது / எலி / கண்டு /சேவலைக் / பயந்து

...........................................................

4) விண்ணதிரச் / சேவல் / சத்தமிட்டது / கொக்கறொக்கோவென

...........................................................................

5) சேய்எலியைக் / கேட்டது / என்னஆபத்து / தாய்எலி / நேர்ந்ததென

.........................................................................

## செயற்பாடு இரண்டு

2. ஒத்த சொற்களை அருகிலுள்ளபெட்டியில் உள்ள சொற்களிலிருந்து தேர்ந்தெடுத்து எழுதுக.

1) ஆவி -
2) ஆபத்து -
3) என்பு -
4) இரத்தம் -
5) கண்டம் -
6) சண்டை -
7) கூற்றுவன் -
8) தோழன் -
9) சல்லாபம் -
10) மாந்தர் -



உரையாடல்
சிநேகிதன்
உதிரம்
கழுத்து
உயிர்
போர்
யமன்
மனிதர்
அபாயம்
எலும்பு



## செயற்பாடு மூன்று

3. கீழே கொடுக்கப்பட்ட விடைகளில் பொருத்தமான விடைகளை தேர்ந்தெடுத்து கேட்கப்படும் வினாக்களுக்கு விடைகளை எழுதுக.



1) கொண்டையில் இரத்தம் தோய்ந்த கூரிய வாள் கொண்டிருந்தது எது?
2) சேய்எலி யாரை நல்ல நண்பனாக்க எண்ணியது?
3) “பஞ்சுபோல மெதுமையான மயிர்” என்பது எவ்வகைத் தொடர்?
4) பூனையின் இரண்டு கண்களும் எவ்வாறு வர்ணிக்கப்பட்டுள்ளது?
5) சேவலின் தலையை சேய்எலி எந்தப் பூவோடு ஒப்பிட்டுத் தாய்எலிக்குக் கூறியது?
6) சேவல் சிறகடித்துக் கூவிய காட்சி எதுபோல இருந்ததாகக் கூறப்பட்டுள்ளது?
7) சேவல் கழுத்தை எவ்வாறு வளைத்தது?
8) “சடசடவென்றடித்து...”இதில் வந்த சடசட என்பது குறிப்பது யாது?



(வினாவிசைக் குறிபோல், உவமைத்தொடர், பூனையை, செவ்வரத்தம்பூ, சண்டைசெய்வீரன் போல, இரட்டைக்கிளவி, பளிங்குபோல, சேவல்)

# பொருத்தமான ஒத்தசொற்களைத் தேர்ந்தெடுங்கள்



| | |
|---|---|
| அகிலம் | முகில் |
| அவலம் | போர் |
| அனல் | மகிழ்ச்சி |
| ஆபரணம் | பூமி |
| ஆயுள் | நெருப்பு |
| ஆரம்பம் | வாழ்நாள் |
| ஆலோசனை | மூர்க்கம் |
| இரை | முடிவு |
| இலட்சியம் | புரிதாபம் |
| தீர்மானம் | கருத்து |
| கோபம் | குறிக்கோள் |
| சந்தோஷம் | தொடக்கம் |
| சிநேகிதம் | அணிகலன் |
| மேகம் | உணவு |
| யுத்தம் | நட்பு |



# ஒத்த சொற்களை இனங்கண்டு எழுதுவோம்

| | | | | |
|---|---|---|---|---|
| 1 ஆசை | 2 சேய் | 3 ஆச்சரியம் | 4 கோபம் | 5 அபாயம் |
| 1 அதிசயம் | 2 விருப்பம் | 3 மகவு | 4 ஆபத்து | 5 சினம் |


நன்றி